# மணமக்கள் மகிழ்ந்தளிப்பு

திருவள்ளுவர் ஆண்டு 2047

மன்மத வருடம் பங்குனித் திங்கள்

17ம் நாள் (30.03.2016)



மணமகன்
அரசரட்ணம்
வினோத்


மணமகள்
செல்வயோகநாதன்
காயத்திரி

புலவர் குழந்தை அவர்களின்

# இராவண காவிய கதைச் சுருக்கம்



இராவணின்



# தமிழ் தாய் வாழ்த்து

தாயே வணக்கம் தமிழ்த் தாயே வணக்கம்
தலைதாழ்த்திக் கரம் கூப்பி வணக்கம்
தரணி எங்கும் புகழ்பூத்துத்தலை நிமிர்த்திநிற்கும்
தாயே வணக்கம் தமிழ்த் தாயே வணக்கம்

செம்மொழித் தமிழே செந்தமிழே
செப்பிடும் உள்ளம் சுவைத்திடும் தமிழே
பைந்தமிழே பழரசமே பரவசம் ஊட்டும்
பழந்தமிழே பாவலர் பசுந்தமிழே வாழி

அண்டங்கள் அளந்து அனைத்தும் அறிந்து
கண்டங்கள் கடந்து கலைகள் வளர்த்து
உண்டெங்கள் தமிழென்று உலக்குக்கு உணர்த்து
மீண்டுமெங்கள் தமிழ்தனை அரியணை ஏத்து.

துன்பங்கள் துரத்தித் தூயதமிழ் உயர்த்தி
இன்பங்கள் சேர்த்து இனியவைஈர்த்து
அன்புகள் காட்டி அகிலத்தை அணைத்து
அன்னைத் தமிழைத் துதித்துப் போற்றிடுவோம் நாம்
போற்றிடுவோம்

வேல்.செல்வயோகநாதன்

# முன்னுரை

ரத்னாகரன் என்ற ஆரியன், தன் மனைவி மக்களுக்காக வழிப்பறித் திருட்டு செய்து வந்தான். ஒரு நாள் அவன் இரு முனிவர்களை வழிமறித்த போது அவர்கள் நீ ஏன் திருடுகிறாய்? எனக் கேட்டார் கள். "எனது மனைவி மக்களைக் காப்பாற்றத் திருடு கிறேன்" என்றான். "திருடுவது பாவம் அல்லவா? உன் பாவத்தில் அவர்கள் பங்கேற்பார்களா?" என்று கேட் டார்கள். அவன் தனது மனைவி மக்களிடம் எனது பாவத் தில் பங்கேற் பீர்களா? எனக் கேட்டதற்கு இல்லை என மறுத்து விட்டார்கள். அன்றிலிருந்து ரத்னாகரன் திருந்தி முனிவர்களின் சொல் கேட்டு நடந்தான்.

ஆரியமன்னன் தசரதன் மைந்தன் இராமனின் கதையை எழுதினான். அதுவேமுதல் இராமாயணம் ஆகும். அவன் பெயரும் வால்மீகி ஆனது. பாரதி யாரால் பாடப்பட்ட தமிழ்கவி கம்பன் வால்மீகியின் கதையை மெருகூட்டி ஆரிய இளவரசன் இராமனை கடவுள் அவதாரமாகவும், தனது இனமான இந்தியத் தமிழர்களை வானரங்களாகவும், இலங்கைத் தமிழர் களை அரக்கர்களாகவும் சித்தரித்து தமிழில் இரா மாயண காவியத்தைப் படைத்துள்ளான்.

தமிழ் கவிகம்பனால் அரக்கன் எனவர்ணிக் கப்பட்டஎங்கள் பாட்டன் இராவணன் சிறந்தசிவபக்தன், நாயன்மார்களின் திருப்பதிகங்களில் சிறப்பாக இடம் பெற்றவன். சைவநெறி வழி உயிர்ப்பலி, புலால் உண்ணுதல், மது அருந்துதல் போன்ற தூர்ச் செயல்

களை விரும்பாதவன். யாழின் இசையால் சிவபெருமானைத் தன் வசப்படுத்தியவன். கலைகள் அறுபத்து நான்கினையும் கற்றுத் தெளிந்த கல்விமான். அட்டாவதானத்தையும் மிஞ்சி தலைக்கு மேலும் பாதத்துக்குக் கீழுமாக தசாவதானம் உள்ள மறத்தமிழ் மன்னன். பத்துத் திக்கும் அவதானிக்கக் கூடிய திறனால் பத்துத் தலை இராவணன் எனவும், ஈஸ்வரனின் பக்தன் என்பதனால் இராவணேஸ்வரன் என்றும், இலங்கை மன்னன் என்பதனால் இலங்கேஸ்வரன் என்றும் சிறப்புப் பெயர்களைப் பெற்றவன்.

சகலகலா வல்லவனான இராவணனை அரக்கனாகவும், அவன் தங்கை காமவல்லியை சூர்ப்பனகையாகவும் புனைந்துள்ளான் கம்பன்.

புலவர் குழந்தை அவர்கள் இராவணனின் உண்மை வரலாற்றை ஆராய்ந்து "இராவண காவியம்" என்ற நூல்தனை கம்பனுக்கு நிகராகத் தந்துள்ளார். அந்த இராவண காவியத்தின் கதைச் சுருக்கத்தை உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம் சுவிஸ் கிளை அனுமதியுடன் இங்கு தருவதில் மன நிறைவு காண்கிறேன்.

**"இராவணன் மேலது நீறு துதிக்கப்படுவது நீறு"**

(திருநீற்றுப்பதிகம்)

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள்கால் விரல்சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவர் உய்யும் வகை
நலம்கொள் நாமம் நமச்சிவாயவே

**அன்புடன்**
**வேல்.செல்வயோகநாதன்.**
**(ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்)**

# பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் சிறப்புப் பாயிரம்

பாவண மல்குமி ராவண காவியம்
நாவண மல்கிய நல்லா சிரியனும்
நலமலி ஓல வலசுவாழ் முத்துச்
சாமிசின் னம்மை காமுறு செல்வ
மைந்தனும் ஆய செந்தமிழ்க் குழந்தை
செப்பினான் அறிவுல கொப்பு மாறே.
இராவண காவியம் எனுமிது தமிழகத்
திராவிடம் இலையெனத் திராவிடர் புரிக.
ஆக்கியோன் குழந்தையும் போக்கறு பனுவலும்
ஆழிசூ ழுலகில் என்றும்
வாழிய நன்றே வாழிய நன்றே.

பாரதிதாசன்

# படையல்

அறுசீர் விருத்தம்

எந்தமிழன் செந்தமிழ்க்கா வாழ்ந்த இரா

வணன்பெருஞ்சீ ரினிது பேசும்

செந்தமிழின் பூங்காவாம் இராவணகா

வியம் எனுமித் தேம்பா நூலைத்

தந்தமிழின் பண்பாட்டை யறிந்துகடைப்

பிடித்தினிது தகவே வாழப்

பைந்தமிழின் பேரேடா வருங்காலத்

தமிழர்க்குப் படைக்கின் றேனே.

*– புலவர் குழந்தை*

# இராவண காவியக் கதைச் சுருக்கம்

மிகப் பழங்காலத்தே தமிழ்நாடு இன்றுள்ள எல்லைக்குட்பட்டிருக்கவில்லை; வடக்கில் பனிமலைக் காறும் பரவியிருந்தது; அயல் நாடர் குடியேற்றத்தால் பின்னர் விந்தமலையில் வடக்கெல்லையாகக் கொண்டது. தென்கடல் நிலமாக இருந்தது. அது, இன்றுள்ள குமரி முனைக்குத் தெற்கில் ஆயிரங் கல்லுக்குமேல் அகன்றி ருந்தது. கிழக்கிலும் வங்கக்கடலும், சாவக முதலிய தீவுகளும் ஒரே நிலப்பரப்பாயிருந்தது. தென்னிலத்தில் குமரிமலை, பன்மலை முதலிய மலைகள் ஓங்கியுயர்ந் திருந்தன. குமரிமலையில் குமரியாறும், பன்மலையில் பஃறுளியாறும் தோன்றி அந் நிலத்தை வளஞ்செய்தன.

குமரியாற்றுக்கும் பஃறுளியாற்றுக்கும் இடைப் பட்ட நிலம் பெருவளநாடு எனவும், பஃறுளிக்கும் தென் கடலுக்கும் இடைப்பட்ட நிலம் தென்பாலிநாடு எனவும் வழங்கின. பஃறுளியாற்றங் கரையில் இவ்விரு நாடுகளின் தலை நகரமான மதுரை இருந்தது. குமரிக்கும் விந்தத்திற் கும் இடைப்பட்ட நிலம் திராவிடம் என வழங்கிற்று. அது வேளிர் என்னும் சிற்றரசர் பலரால் ஆளப்பட்டு வந்தது.

திராவிடத்தின் மேற்கில் சேரநாடு இருந்தது. திரா விடத்தின் கிழக்கில் சோழநாடு இருந்தது. இவ் வகைப் பட்ட தமிழகம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நானிலமாக மக்கட்கு வேண்டிய எல்லாச் செல்வமும் பொருந்தியிருந்தது.

நானில மக்களும் தங்களுக்குள் ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு அவன் ஆணைக்குட்பட்டு வாழ்ந்து வந்தனர். பின்னர் தமிழக முழுமைக்கும் ஒரு மாபெருந் தலைவனை ஏற்படுத்தினர். அவன் தமிழகத்தின் நடுவில் இன்றுள்ள இலங்கையின் தென்மேற்கில் இருந்த ஒரு தொன்னகரில் இருந்து தமிழகத்தை ஆண்டு வந்தனன். அப் பண்டையோன் மரபில் வந்தவரே பாண்டியராவர். அம் மாபெருந் தலைவன் வழிவந்த ஒருவன் தன் மகனை தென்னாட்டுக்கும், மற்றிரு தமிழ் தலைமகளைக் சோழநாடு, சேரநாடுகட்கும் தலைவராக்கினான். அம் மூவர் வழிவந் தோரே பாண்டிய சோழ சேரராவர்.

கி.மு 31 திருவள்ளுவர் ஆண்டாகும். தி.மு 3000 ஆண்டுகளுக்கு முன் தென்கடல் பொங்கித் தென்பாலியையும், கிழக்கு நாட்டின் பெரும்பகுதியையும் வாய்க் கொண்டது; பின், தி.மு 2400இல் ஒருமுறை கடல் பொங்கிப் பெரு வளத்தின் பெரும் பகுதியையும், கிழக்கு நாட்டையும் விழுங்கிற்று, பின் தி.மு 700இல் ஒருமுறை கடல் பெருகித் திராவிடத்தின் ஒரு பகுதியையும் உண்டேப்பமிட்டது.

இரண்டாங் கடல்கோளின் பின்னர் இலங்கை உண்டானது. இலங்கை நாட்டின் நடுவில் இருந்த முக்கூடல் மலை மீது இலங்கைநகர் இருந்தது. மூன்றாங் கடல்கோளுக்கு முன் இலங்கையிலிருந்து தமிழகத்தையாண்டுவந்த தமிழரின் மாபெருந்தலைவர் வழிவந்த வச்சிரவாவுவின் மனைவியான கேகசி என்பாள்

இராவணன், கும்ப கண்ணன், பீடனன் என்னும் மூன்று ஆண்மக்களையும், காமவல்லி என்னும் ஒரு பெண் மகளையும் பெற்றனள். மூத்தவனான இராவணன் முடி புனைந்து தமிழகத்தை ஆண்டு வந்தனன்.

மலைவளங்காணச் சென்ற இராவணனும், திராவிடத்தைச் சார்ந்த முதிரை நகரிலிருந்து முல்லை நாட்டையாண்டு வந்த மாயோன் மகள் வண்டார்குழலி யும் எதிர்பட்டுக் காதல் கொண்டு மணம் புரிந்து இல்லறம் நடத்தி வந்தனர். வண்டார்குழலி சேயோன் என்னும் செம்மலைப் பெற்றனள்.

தமிழகத்தின் வடக்கெல்லையான விந்தச்சாரல் பல சிறு நாடுகளாகப் பாகுபட்டிருந்தது. வடநாட்டில் ஆரியர் என்னும் ஓரினத்தினர் வாழ்ந்து வந்தனர். அவர்களில் கல்வியறிவுள்ள முதியோர் சிலர், இராவணன் தோன்று வதற்கு நெடுநாள் முன்னரே துறவுக் கோலத்துடன் தமிழ கம் போந்தனர். தமிழ் மக்கள் அன்னாரை அன்புடன் வர வேற்று ஊணுடையுதவிப் போற்றி வந்தனர். இவ்வாறே பின்னரும் பின்னரும் பலர் வந்தனர். நாளடைவில் அவர் தமிழகம் முழுவதும் போந்து, தமிழந்தணருடனும், புலவரு டனும் நெருங்கிப் பழகி அரசர் உறவையும் பெற்றனர், நாளாகவாக ஆரிய இளைஞரும் வந்து, தமிழ்ச் செல்வ இளைஞரிடம் தோழமை செய்யும் பார்ப்பன வேலையும் சிலர் பார்த்து வந்தனர்.

நாளடைவில் பலர் பெண்டு பிள்ளைகளுடன் குடியேறி விந்தக் காடுகளில் இலைக்குடில்கள் அமைத்து

வாழ்ந்து வந்தனர். அவர் வேள்வி மூலம் உயிர்களைக் கொன்று உண்ணத் தொடங்கினர். தமிழ்மக்கள் அதனைத் தடுத்தனர். அவர் கேட்கவில்லை, இருபாலர்க்கும் போருண்டானது, அம்மக்கட்போர் தமிழாரிய மன்னர் போரானது. முடிவில் வடவரசர் தோற்றனர். ஆரிய முனிவர்கள் அஞ்சினவர் போல நடித்துப் பல தமிழரசர்களை வஞ்சித்துக் கொன்றனர். நூற்றுக்கணக்கான தமிழர் கோட்டை களைத் தீயிட்டெரிந்தனர்.

விந்தச்சாரலிலிருந்து இடைவள நாட்டையாண்டு வந்த தாடகையென்னும் தமிழரசி இராவணனது துணையை வேண்டினள். அவன் சுவாகு என்னும் படைத்தலைவனைப் பெரும் படையுடன் அனுப்பினான். சுவாகு இடைவளஞ் சென்று ஆரியப் புலைவேள்வியை யகற்றிக் காத்து வந்தான். அதனால், கோசிகன் என்னும் ஆரிய முனிவன் வேள்வி செய்ய முடியாது மனமுடைந்து சென்றனன்.

வடநாட்டில் சரயுவாற்றங்கரையில் உள்ள அயோத்தியில் தசரதன் என்னும் சிற்றரசன் ஒருவன் இருந்தான் அவன் கோசலை, சுமத்திரை என்னும் இரு மனைவியருடனும், பல காதல் மகளிருடனும் களித்துவந்தான்; தனது தோள்வலியால் பல நாடுகளைவென்று கோசலம் என்னும் நாட்டை நிறுவிப் பேரரசனானான். பின் தன் தகுதிக்கேற்பப் பேரரசனான கேகயன் மகள் கைகேகியைக் கேட்டான். அவன் மறுக்கவே, தனது நாட்டைக் கைகேசிக்குப் பரிசமாகக் கொடுத்து அவளை மணந்தனன்.

கிழப்பருவமுற்றும் பிள்ளையில்லாது வருந்திய தசரதன், குலகுரு வசிட்டர் சொற்படி கலைக்கோட்டு முனிவனைக் கொண்டு குதிரை வேள்வி செய்தனன்; ஓர் ஆண் குதிரைபடையுடன் ஓராண்டில் நாடு சுற்றி மீண்டது. முனிவர் வேள்வி தொடங்கினர். அவ்வேள்விக் குதிரையைக் கோசலை வாள் கொண்டு மூன்று வெட்டில் வெட்டி வீழ்த்தினாள். கோசலை தன் கணவனைத் தழுவுவது போல் வெட்டுண்ட அவ்வாண் குதிரையைத் தழுவி அவ்விரவைக் கழித்தனள். சடங்குகள் முடிந்த பின் பல பகல் குதிரை, ஆடு, மா, ஆமை, பாம்பு, பறவை முதலிய பன்னூற்றுக் கணக்கான உயிர்களைக் கொன்று தின்று சோமக்கள்ளுண்டு இன்புற்றனர்.

தசரதன் கலைக்கோடர் முதலிய வேள்வி யாசிரியர் மூவர்க்குங் கோசலை முதலிய மூன்று மனைவியரையும் காணிக்கையாகக் கொடுத்தனன. அவர்களுடன் கனிமொழி பேசிக் கூடிக்கலந்தின்புற்று மூவரும் கருப்பமுறவே அவர்கள் அம்மூவருக்கீடான பொருள் பெற்றுக் கொண்டு அம்மூவரையும் தரசதனிடம் ஒப்பித்துச்சென்றனர். கருப்ப முதிர்ந்து கோசலை இராமனையும், கைகேசி பரதனையும் சுமத்திரை இலக்குவ சத்துருக்கரையும் பெற்றனர். மக்கள் வளர்ந்து மணப்பருவ முற்றனர்.

மனமுடைந்து சென்ற கோசிகன் அயோத்தியை யடைந்து வேள்வித்துணையாக இராமலக்குவரை அழைத்துக்கொண்டு இடைவள நாட்டையடைந்து ஒரு

சோலையில் தங்கினர். அங்கே தனித்து வந்த தாடகையை முனிவன் சொற்படி இராமலக்குவர் கொன்றனர். அங்கிருந்து சென்று தன் குடிலையடைந்து முனிவன் வேள்வி தொடங்கினன்.

சுவாகு இளவரசனான மாரீசனோடு சென்று வேள்வியைத் தடுத்தான். இராமன் சுவாகுவைக் கொன்றான். தன்னிலை மையுணர்ந்த மாரீசன் அங்கு நின்றும் மீண்டனன். மூவரும் வேள்வி முடித்துத் தமிழகத்தை நீங்கினர்.

தூதரால் இதனையறிந்த இராவணன், விந்த நாட்டையாண்டு வந்த தனது தங்கை காமவல்லிக்குத் துணையாகப் பெரும்படையை அனுப்பினன். கரன் என்னும் படைத்தலைவன் அப்பெரும்படையை ஆங்காங்கு அமைத்துக் காத்து வந்தனன். காமவல்லியின் காப்பில் விந்த நங்கை புலைவேள்வியற்றுப் பொலிந்தனள்.

வேள்வி முடித்துச்சென்ற மூவரும் மிதிலையை அடைந்து சனகன் விருந்தினராக இருந்தனர். முனிவர் கட்டளைப்படி இராமன் சீதையின் திருமணத்திற்கேதுவான வில்லை வளைத்தொடித்தனன். சனகன் மகிழ்ந்து, தசரதன் முதலியோரை வரவழைத்துச் சீதையை இராமனுக்கும், ஊர்மிளையை லக்குவனுக்கும், தன் தம்பி குசத்துவசன் மகளிரான மாளவியைப் பரதனுக்கும், சுதகீர்த்தியைச் சத்துருக்கனுக்கும் மணஞ்செய்து கொடுத்தான். தசரதன் சனகனிடம் விடைபெற்று மக்கள் மருமக்களுடன் அயோத்தியையடைந்தனன்.

தசரதன், இராமன் மீதுள்ள பற்றினால் பரதனுக் குரிய நாட்டை இராமனுக்காக வெண்ணித் தந்திரமாகப் பரதனைச் சத்துருக்கனுடன் அவன் பாட்டனூருக்கனுப்பி விட்டு இராமனை நாட்டு மக்களிடம் பழகச் செய்தனன். இவ்வாறு பன்னிரண்டாண்டுகள் சென்றன. தசரதன் அரசர்களையும் குடிமக்களையும் கலந்து ராமனுக்கு இளவரசு பட்டங்கட்ட முடிவு செய்தனர், இதையறிந்த கைகேசியின் தோழியான மந்தரை என்பாள் அரசன் சூழ்ச்சியைக் கைகேசியிடம் கூறி முடிசூட்டுதலைத் தடுக்கும்படி வேண்டினாள். கைகேசி தசரதனிடம் முன்னர்ச் சம்பரனை வென்றதற்காகக் கொடுத்த இரு வரங்களில் ஒன்றால் பரதன் நாடாளவும் மற்றொன்றால் இராமன் பதினான்காண்டு காடாளவும் செய்யவேண்டும் எனக் கேட்டாள். தசரதன் சூழ்ச்சி பலிக்கவில்லை. இராமன், சீதை, லக்குவன் மூவரும் தேரேறிக் காடு சென்றனர்.

சென்றவர், குகனென்னும் தோழனால் கங்கை யைக் கடந்து வழிநெடுக ஆரிய முனிவர் வரவேற்று வழியனுப்பச் சென்று சித்திரகூட மலையை யடைந்திருந் தனர். தேரோட்டி வந்த சுமந்திரன் சென்று கூறவே தசரதன் இராமன் பிரிவால் உயிர் விட்டனன். பரதன் செய்தி கேட்டு வந்து தந்தையின் உடலை அடக்கம் செய்து சேனை சூழச் சித்திரகூடத்தையடைந்து இராமனை நாடாள வரும்படி வேண்டினான். இராமன் நாடு பரதனுக்குரிய தென்பதைக்கூற பரதன் நான் அதை உனக்குத் தந்தனன் ஏற்றருள்கவென, இராமன் நான் பெற்றோர் சொற்படி பதினான்காண்டு கழித்து வருகிறேன். அது, மட்டும்

எனக்கீடாக நீ ஆள்வாயெனப் பரதன் இராமன் மிதியடியைப் பெற்று மீண்டும், நந்தியூர் என்னும் சிற்றூரில் தங்கி, மிதியடியை முடிபுனைந்தரியணையிருத்தி அதை வணங்கி வந்தனன். சத்துருக்கன் ஆட்சி புரிந்து வந்தனன்.

சித்திர கூடத்தைவிட்டு இராமன் தமிழகத்தை யடைய ஆரியர் வரவேற்கச் சில நாளங்கிருந்து சரபங்கன் நிலையையடைந்திருந்தனர். ஒருநாள் முனிவர்கள் ஒன்றுகூடி வந்து தமிழகத்தில் தாங்கள் தவவேள்வி செய்ய முடியாமல் கரன் தடுப்பதைக்கூறி அவனைக் கொன்று தங்களை வாழ்விக்கும்படி வேண்டினர். இராமன் அதற்கிசைந்து விடைபெற்றுச் சென்று முனிவர் இருக்கையில் தங்கித் தமிழ் கற்றும், வேள்வி செய்ய முனிவர்க்குதவியும், இரண்டகத் தமிழரை நட்பாக்கியும் பத்தாண்டினை அங்கே கழித்தனன். பின் அகத்தியன் நிலையையடைந்து அவனால் ஒரு வில்லும், இரு அம்புக்கூடுந்தரப் பெற்றுச் சென்று பஞ்சவடி என்னும் இடத்தில் தங்கியிருந்தனர்.

இராமன் ஒருநாள் தனித்துலாவிய காமவல்லி யைக் கண்டு காமுற்று, அவள் அறிவுரையைக் கொள் ளாது கையை பிடித்திழுத்து வற்புறுத்தினான். அவள் திமிறிக் கொண்டு விரைந்து சென்றனள். இராமன் தன் தம்பியால் அத்தமிழரசியை மூக்கையும் காதையும் முலைக்கண்களையும் அறுத்துக்கொன்று முன்னேற் பாடில்லாத கரனையும் பொருதமிழ்தான்.

தூதரால் செய்தியுணர்ந்த இராவணன் கொதித் தெழுந்து தேரேறு விந்தஞ்சென்று, காமவல்லி வளர்த்த மானைவிட்டு இராமலக்குவரைப் பிரித்து அவரை வளைத் துக்கொள்ளும்படி வீரரை வைத்துச் சீதையை எடுத்து வந்தனன். சீதை புலம்ப, உன்னை உன் கணவன்வரின் நல்லறிவு புகட்டி அவனுடன் அனுப்புகிறேன் அஞ்சேல் எனத்தேற்றித் தன் தங்கையின் நிலையில் வைத்துப் போற்றி வந்தனன்.

மறவரால் வளைக்கப்பட்ட இராமலக்குவர் அவரை யோட்டிச் சென்று இலைக்குடிலில் சீதையைக் காணாது வருந்தித் தேடிப் பாதையை பின்பற்றிச் சென்று ஒரு முனிவன் குடிலை யடைந்தனர். அவன் சீதையை இராவணன் இலங்கை கொண்டு செல்வதையும், வாலியால் துரத்தப்பட்டு மதங்கரிடமுள்ள சுக்ரீவன் வரலாறுங் கூறியனுப்பச் சென்று மதங்கரைக் கண்டு நிகழ்ந்தது கூறினர். அங்கே அனுமன் வர மதங்கன் அவர்களை அறிமுகப்படுத்தி அனுமனுடன் அனுப்பச் சென்று சுக்ரீவனைக் கண்டு வரவுகூறி உதவி நாடினர். அவன் என் அண்ணனைக் கொன்று எனக்கு அரசீந்தால் உனது மனைவியை மீட்க உதவுவேன் என்றான். இராமன் அதற்கிசைந்து வாலியுடன் பொரச் சொல்லி இருவரும் பொரும்போது மறைவிலிருந்து அம் பெய்து வாலியைக் கொன்று சுக்கிரீவனைக் கிட்கிந்தைக் கரசனாக்கி மதங்கர் நிலையை அடைந்திருந்தான்.

சீதையைப் பார்த்துவரத் தேவியோடு சென்ற இராவணன், இராமன் வாலியைக்கொன்று சுக்கிரீவன்

படையொடு இலங்கையை முற்ற வரப்போவதாகக் கூறிச் சென்றனன். சீதை, தன்னால் இலங்கை போர்க்கள மாவதை எண்ணிப் புலம்பிக்கொண்டிருக்கையில் பீடணன் மகள் திரிசடை அங்கு வரவே சீதை அவளிடம் தன் கணவன் படையெடுத்துவர விருப்பதைக் கூறித் தன்னால் இலங்கை போர்க்களமாகுமே என வருந்த, திரிசடை இராவணன் திறமை கூறி, சீதை எனக்கு அச்சமாக இருக்கிறது, உன் தந்தையிடம் சொல்லி என்னை எப்படியாவது என் கணவனிடம் சேர்த்துப் போரில்லாமல் செய்வாயென வேண்டினாள். திரிசடை அவ்வாறே தன் தந்தையிடம் சென்று கூற, அவன் சரியெனக் கூறியனுப்பி விட்டுத் தானும் இராமனையடைந்து சுக்கிரீவன் போல் அரசனாக எண்ணி அதைத் தன் நண்பன் நீலனிடம் கூறி ஆவன செய்யுமாறு ஏற்பாடு செய்திருந் தனன்.

இராமன் சீதையைப் பார்த்துவரும்படி சுக்கிரீ வனது அமைச்சனான அனுமனை அனுப்பினன். அனுமன் இலங்கை சென்று ஓர் ஆரியனால் பீடணன் நிலைமை யறிந்து சென்று பீடணன் மனையையடைந் தான். பீடணன் அனுமனை வரவேற்றுத் தனது எண்ணத் தைக் கூறவே, அனுமன் அவ்வாறே செய்வதாக உறுதி கூறித் திரிசடையுடன் சென்று சீதையைத் தனியாக அழைத்து வந்து இராமன் படையொடு வந்து இலங் கையை யழித்து உன்னை மீட்டுச் செல்வானெனவே, சீதை திடுக்கிட்டு இராவணன் பெருமை கூறித் தனியாக வரும்படி கூறுமெனக் கூறித் திரிசடையுடன் சென்றனன்.

அனுமன் வெளிச் செல்லும்போது வாயிற் காவலர் பிடித்துக்கொண்டு போய் இராவணனிடம் விட்டனர். இராவணன் அவன் வந்த வரலாற்றைக் கேட்டு அயலா னோடு கூடி அரசைக் கொன்ற இரண்டகச் செயலை கண்டித்துக் கூறி இராமனைத் தனியாக வந்து மன்னிப்புக் கேட்டு மனைவியையழைத்தேகும்படி கூறெனக் கூறி யனுப்பினன்.

அனுமன் சென்று கூறவே, இராமன் பணிவை மறுத்துப் படையுடன் சென்று இலங்கைப் புறத்துத் தங்கினான். ஒற்றரால் இதனை அறிந்து இராவணன், ராமனிடம் அதிகாயனைத் தூது விட்டான். ராமன் பணிவை மறுத்துப் போருக்குத் தயாரெனக் கூறிவிட்டனன். இரா வணன் பேரவை கூட்டிப் போரில் இராமனை முறியடிப் பதே ஏற்றதென முடிவு கண்டனன். அப்போது பீடன னெழுந்து ராமன் திறமை கூறி, "சீதையை விட்டு உறவு கொள்வோம். மீளானாயின் வந்து நாட்டை விட்டேனும் பகையின்றி வாழ்வோ" மென்றனன். இராவணன் வெகுண்டு அவையை விட்டோடும்படி கூற அவன் அவ்வாறே சென்றனன்.

அவையை விட்டுச்சென்ற பீடணன் நீலன், வேலன் குயிலன், நேரி என்னும் படைத்தலைவன் சென்று அடைக்கலமென இராமன் காலில் விழுந்தான். அவன் புகல் தந்து அப்போதே இலங்கைய ரசனாக அவனுக்கு முடிசூட்டினன் பீடணன் இலங்கையை எளிதில் வெல்வதற்கான உளவையெல்லாம் இராமனுக்கு உரைத்தனன்.

இதையறிந்த இராவணன் கடுஞ்சினங்கொண்டு போருக்குத் தயாராகும்படி படைத்தலைவருக்குக் கட்டளை யிட்டான். தானைத்தலைவர் முரசறைவித்தனர். தமிழ் மறவர் போர்க் கோலம் பூண்டு திரண்டனர்.

பொழுது புலர்ந்ததும் பகைப்படை நகர்ப்புறத்து வந்து தங்கிற்று. இராவணன் கோட்டையைக் காப்பமைக் கும்படி கட்டளையிட்டுப் பகைப்படை நிலைமையை அறிந்து வர ஒற்றரை ஏவினான். பீடணன் அவரைக் காட்டிக் கொடுத்தனன். இராமன் அவரைச் சிறையிட்டனன். இவ்வாறு பலமுறை காட்டிக் கொடுத்தனன் கடை மகன்.

ஆரியப்படை ஊரை முற்றியது. முதல் போரில் வடவர் படை தோற்றது. களங்கண்டு பொருதனர். பின் இரண்டு நாள் இரவும் பகலும் ஓயாது போர் நடந்தது. இருபடையிலும் பலர் மாண்டனர்.

கும்பகன்னனுக்கும் இராமனுக்கும் கடும்போர் நடந்தது. இராமன் சமயம் பார்த்து முறையின்றிக் கைகால் களையறுத்துக் கொன்றான். செய்திகேட்ட இராவணன் கதறிப் புலம்பச் சேயோன் தேற்றிச்சென்று போர்களம் புக்கான்.

ஓரிடத்தில் கும்பலாக இருந்த ஆரியப்படையொடு தனியாகப் பொருது கொண்டிருந்தான் சேயோன். பீடணன் இராமனிடம் கூறி இதுவே அவனைக் கொல்ல ஏற்ற காலமென்றான். இராமனேவ இலக்குவன்,

பீடணன், சுக்கிரீவன், அனுமன் முதலியோர் பெரும் படையுடன் சென்று வளைத்துப் பொருதனர் ஒருவன் பின்னாலிருந்து தேர்ப்பாகனைக் கொன்றான். பீடணன் குதிரைகளைக் கொன்றான். முடிவில் சேயோன் அம்புக் கூடு வறிது பட்டது. வாள் முதலிய கொண்டு பொருதான். அந்தோ! முடிவில் இலக்குவன் ஓரம்பையேவித் தமிழர் குலக் கொழுந்தைத் தலையையறுத்துக் கொன்றனன்.

அது கேட்ட இலங்கை ஓவென்றலறியது. இராவணன் பலவாறு புலம்பிச் சீறியெழுந்து களஞ் சென்றான். இராவணனுக்கும் இராமனுக்கும் கடும்போர் நடந்தது. இலக்குவன் முதலிய அனைவரும் சூழ்ந்து பொருதனர். இராமன் தேர்ப்பாகனைக் கொன்றான். பீடணன் குதிரைகளைக் கொன்றான். இராவணன் வெகுண்டு அப்பாவி மேல் ஏறியவாளை ஓங்கினான். இலக்குவன் குறுக்கே வந்து அம்பெய்யவே அவ்வாளை அவன்மேல் எறிந்தான். அப்போது, அதாவது இலக்குவன் பக்கம் வாளெறியத் திரும்பும் போது, மாதலி என்பான் ஒரு கூரிய அம்பை இராமனிடம் கொடுத்து, வாள் எறிந்து திரும்பு முன் கொல்க. எனவே, முறைகெட்ட இராமன் அவ்வாறே தமிழகம் புலம்பத் தலையறுத்து வீழ்த்தினான். தமிழர் மாபெருந் தலைவன் உடல் மண்ணில் புரண்டது. அடுகளம் அழுகளமாயது. வண்டார்குழலி உடனுயிர் விட்டனள். யாவரையும் அடக்கம் செய்து காடு வாழ்த்திச் சென்றனர் தமிழர். இராமன் பீடணனுடன் கோயில் புக்கிருந்து, பீடணனால் சீதை அழைத்துவரப்பட, அவள் இராவணன் பெருமை கூறி வருந்தினாள். இராமன் அதைப் பொருட்படுத்திலன்.

இராமன் பீடணனோடு, தமிழகத்தில் தமிழரைப் போல எல்லா உரிமையையும் எய்தி ஆரியர் நிலையாய் இருந்து வாழ்தற்கேற்ற ஒப்பந்தஞ் செய்து கொண்டு, பீடணனை இலங்கை யரசனாக்கிப் பெரும்படையைக் காப்பாக வைத்துவிட்டு அயோத்தி சென்றனன். சுக்கிரீவன் கிட்கிந்தை சென்றனன்.

இராமன் அயோத்தி சென்று முடிபுனைந்து அரசு புரிந்து வருகையில், ஓர் ஆரியன் தனது மாண்ட பிள்ளை யுடன் அரண்மனையையடைந்து, "உனது நாட்டில் ஒரு சூத்திரன் தமிழன் தவஞ் செய்கிறான். அதனால், எனது பிள்ளை இறந்தது" எனக் கூற, அதைக்கேட்ட இராமன் ஆரியர் வழிகாட்ட அங்குச் சென்று, பீடணனது ஆரிய அடிமையாட்சியை வெறுத்து வாள் வடக்கிருந்த உயிர் விடற்கு உண்ணா நோன்பிருந்த சம்புகன் என்னும் தமிழ் மகனை வெட்டி வீழ்த்தி நகருற்றான். ஆரியர் செத்த பிள்ளை பிழைத்ததெனக் கூறிவிட்டனர்.

ஒருநாள் ஓர் ஒற்றன் இராமனிடம் வந்து 'அயலான் மனையில் பல மாதம் இருந்தவளை அழைத்து வந்து வைத்துக் கொண்டான்' என ஊரார் பழிக்கின்றனர் எனக் கூறினான். இராமன் அதைச் சீதையிடம் கூறி வருந்தினான். சீதை ஊர் பழிப்பதற்கு அஞ்சக்கூடாது எனக், கணவனைத் தேற்றினாள். எனினும் இராமன் மனம் ஒப்பாது இலக்குவனால் சீதையைக் காட்டில் கொண்டு போய்விட்டு விட்டு நாடாண்டு வந்தனன்.

# ஆராய்ச்சி முன்னுரை

**அறிஞர் அண்ணா அவர்கள்**

இராவண காவியம் திடுக்கிடுகிறீர்களா? அப்படித் தான் இருக்கும், பன்னெடுங் காலமாக இராமாயணம் படித்தும், படிக்கப் பக்க நின்று கேட்டும் வந்த மக்களல்லவா! அவர்களின் செவிக்கு, இராவண காவியம் என்ற ஒலியே சற்றுக் கிலி தருவதாகத்தான் இருக்கும். எனினும், இந்நூல் எதிர்பாராதல்ல. காலத்தின் விளைவு, ஆராய்ச்சி யின் அறிகுறி, புரட்சிப் பொறி என்று பல கூறலாம். இதற்குக் காரணமாக, இதுபோல் ஒரு நூல் வெளிவந்தே தீரும் என்பதை, நாட்டு மக்களின் உள்ளத்தின் போக்கிலே ஏற் பட்டு வரும் புதிய எழுச்சியை அறிந்தோர், அறிந்திருந் தனர். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், இதனை அறிவித்தே விட்டார் பல ஆண்டுகளுக்கு முன்னரே.

"தென்றிசையைப் பார்க்கின்றேன் என்செய்வேன்

என்றன்

சிந்தையெலாம் தோள்களெலாம் பூரிக்கு தடடா!"

என்பது கவிஞன் கூற்று.

இராவண காவியம் புரட்சிக் கவிஞரின் புதுக் கவிதை போல், புதிய தமிழகத்தின் ஓவியம். இதனுடைய நோக்கம் முன்னுள்ள ஏடுகளின் மூலம் ஏற்பட்ட கேடு களைக் களைந்து, இந்நாள் நினைவுக்கேற்ப, அவற் றினை ஆராய்ந்து, புது உருவாக்கித் தருவது. பழைய உருவிலே பற்றுக்கொண்டோருக்கு இது பயங்கரப் புய லாகத் தோன்றும். இதனை, ஆக்கியோர் அறிவார், மனித

இயல்பறிந்தோர் ஆச்சரியமும் கொள்வார். இராம நவமி கொண்டாடும் நாட்களிலே, நாட்டிலே, இராவண காவியம் ஆக்கப்படுவது அதிசயம் என்று கருதிப் பயனில்லை. அறிவிப்பு என்று கொள்ள வேண்டும் பழமை மடிகிறது என்பதற்கான அறிவிப்பு ஜாரின் கொடுமை உண்டாக்கிய சூழ்நிலையே தான் ஒரு லெனின் தோன்ற முடிந்தது. தோன்றினதால்தான், யார் தேவகுமாரன் என்று தேயத்தினரால் வணங்கப்பட்டு வந்தானோ அவன், மக்களின் இரத்தத்தை உறிஞ்சிடும் பேயன் என்று ஏற்பட்டது. ஜார் இல்லையேல் லெனின் இல்லை. அவசியம் இராது. அஃதேபோல், இராமாயணத்திற்கு ஆக்கந் தேட முனைவோரும் சித்திரம் தீட்டிடு வோரும் சிறு கட்டுரை யாக்கிடுவோரும் இன்று புதுக் கூத்தாட முற்பட்டிருக்கவில்லையானால், இக்காவியமும் எழுந்திராது. ஒன்றின் விளைவு மற்றொன்று விளைவு மட்டுமல்ல ஒன்றுக்கு மற்றொன்று மறுப்பு.

இராமன் தெய்வமாக்கப்பட்டான், இராமன் தெய்வமாகத் திகழ்வதற்காக, இராவணன் அரக்கனாக்கப்பட்டான். கோவிலுக்கு ஓர் உருத்தேவை என்பதற்காக, கொற்றவன் மகனாக மட்டுமே குறிக்கப்பட வேண்டிய இராமன் கையில், மகத்துவம் பொருந்திய கோதண்டத்தையும், இராம தூதனின் வாலுக்கு நினைத்த அளவில் நீண்டு வளரக்கூடிய மகிமையையும் கவி கற்பித்துக் கொண்டார். வாலும் வில்லும் வணக்கத்துக்குரிய பொருள்களாக் கப்படவே, தோள் வலியும் மன வலியும் படைத்த ஒரு மன்னன் மிலேச்சனாக்கப்பட்டான். இராமனுக்குச்

செந்தாமரைக்கண் அமைத்தார் கவி; எனவே, இராவணன் கண்கள் செந்தழலை உமிழ்ந்தன என்று தீட்டலானார். அவருடைய நோக்கம், இராமனைத் தேவனாக்க வேண்டும் என்பது அதற்கேற்றபடி கதை புனைந்தார்.

இராவண காவியம், முன்னாள் கவி, தம் நோக்கத்துக்காக இராவணன் மீது ஏற்றிய இழிகுணங்களையும், கொடுஞ் செயல்களையும் களைந்தெறியவும், இராவணனுடைய தூய்மைக்கு ஆதாரமான பல புகலவும், அதே போல இராமனுடைய குணம், செயல் ஆகியவற்றிலே காணக் கிடைக்கும் தவறுகளைத் தெளிவுபடுத்தவும் தோன்றிய நூலாகும். இராமன் கோயில் எங்கும் காணபடும் இக் காலத்திலே, இம் முயற்சியில் ஈடுபட “நெஞ்சழுத்தமும்” அதிகம் வேண்டுமல்லவா? அஃது ஆசிரியருக்கு அப்படியே அமைந்திருக்கிறது. எங்ஙனம் எனில், அவர் முன்னால் கவிபோல ஆரியரின் போற்றுதல், அரசர்களின் மாலை மரியாதை ஆகியவற்றினைப் பெறும் எண்ணம் கொள்ளாமல், மக்கள் மன்றத்திற்கு, மனத்திற்பட்ட உண்மையை எடுத்துரைப்பதே தமிழன் மாண்பு என்ற கொள்கையினராவர். அவர் தன்மான இயக்கத்தவர். எனவே, தகுமா? முறையா? ஏற்றதா? என்ற கேள்விகளை அல்ல, சொல்லித் தீர வேண்டும் உண்மை வெல்லும் இன்று அல்லது நாளை என்ற உறுதியைத் துணைக் கொண்டு இந்நூலைச் செய்துள்ளார்.

இராமனும் இராவணனும் உண்மை உருவங்களா? வரலாற்றுக் காலத்தவரா? அல்ல கற்பனைகள்.

இதனைக் கூறத் தன்மான இயக்கத்தார் தயங்குவ தில்லை. ஆனால், அவர் தம் கேள்விகட்குத்தக்க விடை யிறுக்க முடியாத நேரத்தில் மட்டுமே, செந்தமிழை வாணி கம் செய்வோர், இராமாயணம் ஓர் கற்பனைக் கதை என்று ரைப்பரேயொழிய, மற்றைப்போதினில், இராமனை நிஜ புருஷனாகவே எண்ணுவர் மதிப்பர் வணங்குவர். ஆராய்ச் சிக்கூடத்தில் மட்டுமே ஓரளவுக்கு அவர்களின் பஜனை மனப்பான்மை குறையும். மற்றப்போதெல்லாம் அவர்கள் இராம தாசர்களே.

தன்மான இயக்கத்தவர் இராவண தாசர்களல்லர் இராவணனுக்குக் கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய் வித்துப் பூஜாரிகளாக வேண்டும் என்பதற்காக அல்ல இக காவியம் புனைந்தது. பழி சுமத்தினரே பண்டைக் கவி ஞர்கள் இராவணன் மீது. இது முறையல்லவே, துருவிப் பார்க்குங்கால் விஷயம் முற்றிலும் வேறாகவன்றோ உளது என்று எண்ணித் தீட்டியதே இந்த ஏடு.

இராமதாசர்களுக்கு இராவணதாசர் விடுக்கும் மறுப்புரை அல்ல இந்நூல். இராமதாசர்களுக்கு. தன்மானத் தமிழர் தரும் மயக்க நீக்கு மருந்து இது. “தாசர் நிலை கூடாது தமிழா! இராமதாசர் என்பது ஆரிய தாசராக்கு வதற்கே பயன்படும் நண்பா!” என்று அறிவுறுத்தவே இந்நூல் வெளிவந்துள்ளது.

இராமாயணம் தீட்டப்பட்ட காலம், இந்த பரந்த பூபாகத்திலே இரு வேறு கலாச்சாரங்கள் மோதத்

தொடங்கிய நேரம். இது பண்பாடு, மக்கள் உளநூல், நாட்டுநிலை அறிவோர், அறிந்தோர் கண்ட உண்மை.

திராவிட இன மக்களின் எழில் மிக்க வாழ்க்கையிலே ஆரிய இனக் கலாச்சாரம் தூவப்பட்டது என்பதை மறுப்பார் எவருமிலை. நாம் நமது கருத்துக்கு மாறானவர்கள், இரு சாராரும் இதனில் மாறுபட்டோமில்லை. ஏனெனில், இது மறைக்க முடியாத உண்மையாகிவிட்டது.

திராவிடம் ஆரியம் எனும் இரு வேறு பண்பாடுகள் இருந்தன, கலந்தன. இதனை அவர்களும் கூறுகின்றனர். எது திராவிடம், எது ஆரியம் என்று பிரித்துக்காட்டக் கூடாதவாறு கலந்துவிட்டது என்று புன்முறுவலுடன் கூறுவர். பிரித்துக்கூறக் கூடாது என்ற ஆர்வம் அவர்களுக்கு இருப்பது மட்டுமல்ல, அவர் தம் ஆராய்ச்சியாலும் தெரிவது, பிற்காலத்தில் பிரிக்கக்கூடாதவாறு, சர்வ ஜாக்கிரதையாக மிகத் திறமையுடன், அந்நாளிலே ஆரியத்தைத் திராவிடத்தில் குழைத்திருக்கிறார்கள் என்ற உண்மையும் தெற்றென விளங்குகிறது. கண்டுபிடிக்கவே முடியாத களவு! வெளிக்குத் தெரியாமல் நடைபெறும் விபசாரம்! ஓசைப்படாமல் கடிக்கும் நாகம்! இவை போல் இது பிரிக்கவே முடியாதபடி கலந்து போயிருக்கக் கூடும்.

இஃதோ புதை பொருள் தோண்டப்படும் காலம். மொகஞ்சதரோக்கள் காணப்படும் காலம்! மனித அறிவுக்கு எட்டாதது என்று எண்ணப்பட்ட எண்ணற்ற

விஷயங்களை எளிதில் அறியக்கூடிய வழிவகை கண்ட காலம். எனவே தான், எது ஆரியம், எது திராவிடம் என்று பிரித்துக் காட்டக் கூட முடியாத அளவு கலந்து போய்விட்டது என்று கூறப்படும் தன்மையை, மாற்றிட முடிகிறது. மாற்றாரின் கோபத்துக்குக் காரணம் அதுவே. எவ்வளவு முன்னேற்பாடாக. திராவிடக் கலையினைச் சிதைத்தும் குறைத்தும், ஆரியத்தை அத்துடன் இணைத்தும் இழைத் தும், ஒட்டியும் கட்டியும், பூசியும் தூவியும் பலவகையாலும் பல காலமாகப் பாடுபட்டுக் கலந்தும் இன்று இந்தப் "பாவிகள்" எப்படியோ துப்புக் கண்டுபிடித்து, துருவித் துருவிப் பார்த்துச் சலித்தும் புடைத் தும் புடம்போட்டும் பார்த்து, இதோ ஆரியம், இதோ திராவிடம், இன்னது இன்ன அளவு உள்ளது என்று பிரித்துக் காட்டுகின் றனரே! அந்த நாள் தொட்டு நாம் செய்த முயற்சிக்கு இந்நாள் வந்ததே விபத்து! என்றெண்ணிக் கவலைப்படுகின்றனர்; அவர்கள் கவலைப்படுகிறார்களே என்பதற்காகக் காலவேகம் வேலை நிறுத்தம் செய்யுமா? தடையும், எதிர்ப்புப் படையும் அந்த வேகத்தை அதிகப் படுத்துகின்றன.

இராவண காவியத்தை இந்த மனநிலையின் கனி யெனக் கொள்ள வேண்டும். இதுவும், அந்நாள் இராமா யணம் போலக் கலைப்போர் முரசுதான். இரண் டும் கற்பனைகளே. முன்னது இராமனைத் தேவனாக்க! இஃது இராவணனைத் தேவனாக்கவல்ல தமிழனாக்க. அதாவது வீரனாக்க! முன்னதற்குக் கவி, வானையும் வானி லுறை வோரையும் துணை கொள்ள நேரிட்டது. இந் நூலுக்கு அது தேவையில்லை. முன் னூலில்

புதைந்துள்ளவைகளைக் கொண்டே, இராவணனின் உருவம் இத்தன்மையது என்று எடுத்துக் காட்டுகிறார் நூலாசிரியர்.

சம்பராசுர யுத்தம் என்று முன்னூல் கூறுகிறது; அசுரன் அவன் என்று பயங்காட்டுகிறது. இராவண காவியத்திலே சம்பரன் அசுரனல்லன், பாண்டியன் எனப்படுகிறது. எதைக் கொண்டு இம் முடிவு கட்டுகிறார் ஆசிரியர்? முன்னூலிலே சம்பராசுரன், மீனக் கொடி யோன் என்று குறிக்கப்பட்டிருக்கிறது; ஆக மீனக்கொடி பாண்டியனுக்குரியது. எனவே, சம்பரன் அசுரனென்று ஆரியரால் நிந்திக்கப்பட்ட பாண்டிய மன்னனாகத்தான் இருக்க வேண்டும் என்று முடிவு கட்டுகிறது இந்நூல். இஃதே போவே, இந்நூலின் கண் காணப்படும் பல்வேறு நிகழ்ச்சிகட்கும் ஆதாரம், இராமாயணத்திலிருந்து சலித்து எடுக்கப்பட்டவையேயாகும்.

இராவண காவியத்திலிருந்து தப்ப வேண்டு மென்று விரும்பும் ஆரியர்க்கும், ஆரிய நேசர்கட்கும், ஒரே ஒரு வழி தான் உண்டு. இராமாயணமே பொய்க்கதை, அதனை நாங்கள் ஏற்கோம் என்று அறிவித்து விடுவது தான். வேறு மார்க்கம் இல்லை.

கதை கிடக்கட்டுமய்யா, காவிய ரசனை இருக் கிறதே! அது கம்பனின் இராமாயணத்தில் பொங்கி வழிகிறதே! அஃதிருக் கட்டும் அச்சம் ஏன்? கொச்சைத்

தமிழிலே, ஏதேதோ கூறிடுவோர் கூறட்டும். அழகு கவிதையில் ஆரிய இராமன் மிளிர்கிறான் என்று கூறுவதற்கும் இந்தப் பொல்லாத குழந்தை இடந்தரவில்லை. கூற வேண்டியதைக் காவியச்சுவை குறைவுபடா வண்ணம் கூறி விட்டிருக்கிறார். அங்கு ஆறு ஓடும்விதம் எவ்வளவு அழகுபட உளதோ, அவ்வளவு அழகுபட இங்குமுளது. அங்கு இயற்கைக்குத் தமிழ் ஆபரணம் பூட்டப்பட்டிருப்பது போலவே. அதிலாவது தேவாம்சம் புகுந்து தமிழின் இனிமைக்கு ஊறு தேடுகிறது. இதன் கண் அக்குறையும் கிடையாது. அது ஆரியங் கலந்த கடுந்தமிழில் புலவர்க்காக ஆக்கப்பட்டது. இது எளிய இனிய தனித்தமிழில் எல்லாத் தமிழ் மக்களுக்கும் இயற்றப்பட்டது. எடுத்துக்காட்டாகச் சில கூறுவோம்.



# கதிரவன் தோற்றம்

"அளித்தகையில்லா வாற்ற லமைந்தவன் கொடுமையஞ்சி
வெளிப்பட வரிதென் றுன்னி வேதனை யுழக்கும் வேலை
களித்தவர் களிப்பு நீங்கக் காப்பவர் தம்மைக் கண்ணுற்
றொளித்தவர் வெளிப்பட் டன்னக் கதிரவ
னுதயஞ் செய்தான்."

- கம்பராமாயணம் : அணிவகுப்புப் படலம் - 24

(சூரியன், இராவணன் கொடுமைக்கு அஞ்சி வெளிவர முடியாமல் வருந்திக் கொண்டிருக்கும்போது, இராமன் படையைக் கண்டு வெளிப்பட்டான்.)

"இருண்டபே ரிருளை நீக்கி இளங்கதிர்ச் செல்வன் துப்பில்
திரண்டுமே பொருது வென்று சென்றவர் போக மண்ணிற்
புரண்டுமே யுயிரை நீத்துப் போனமா மறவர்க் கின்றோ
டிரண்டுநா ளாயிற் றென்ன எண்ணுவான் போல
வந்தான்"

- இராவண காவியம்; இரண்டாம் போர்ப் படலம்-!

(துப்பு - வலி. துப்பில் திரண்டு - வலிமிக்கு)

## கதிரவன் மறைவு

"தன்றனிப் புதல்வன் வென்றித் தசமுகன் முடியில் தைத்த
மின்றளிர்த் தனைய பன்மா மணியினை வெளியிற் கண்டான்
ஒன்றொழித் தொன்றா மென்றவ் வரக்கனும் ஒளிப்பான் போல
வன்றளிக் குன்றுக் கப்பால் இரவியும் மறையப் போனான்."

- கம்பராமாயணம் ; மகுடபங்கப் படலம் - 41

(சூரியன் மகனான சுக்கிரீவன் இராவணனது

மணிமுடியைச் சிதைக்க இராவணன் அங்கு நின்று சென்றதுபோல, மகன் வெற்றிகண்ட மகிழ்வால் சூரியனும் மறைந்து சென்றான்.)

"குருதி யாடிக் குவிபிணக் காடணர்
பாவை போலப் பயர்செங் களத்தினை
பரிதி காணப் படாதெனச் செல்லவே
இரவு வந்த தினங்கொலு வேனெனா"

- இராவண காவியம், முதற்போர்ப் படலம் - 77

(அணர்தல் - மேல் நோக்கி எழுதல், பரவை - கடல்)

(அணர்தல் - மேல் நோக்கி எழுதல், பரவை - கடல் விரிக்கிற் பெருகுதல். புலவர் குழந்தை பெருங்காப் பியத்திற்குள்ள இலக்கண முறை சிறக்கச் செய்துள்ளார். கவிச்சுவை, ஓசை, உவமைகள், அணிகள் அழகுடன் அமைந்துள்ளன. அகப் புற இலக்கணங்களில் கூறப்படும் களவு. கற்பு, போர் முறை, வீரம் முதலியவற்றிற்கோர் சிறந்த இலக்கியமாகத் திகழ்கின்றது இது. எனவே, சிறந்ததோர் காவியமாக அமைந்துள்ள இராவண காவியம் தமிழின் இனிமை கண்டு சொக்குவோருக்கு. விருந்தாக அமையுந் தகைமைத்து.

இராமாயணம், ஆரிய ஆதிக்கத்துக்குப் பயன்பட்ட தென்பது மறுக்கொணாத உண்மை. பண்டித நேரு அவர்கள் தம் திருமகளாருக்குத் தீட்டிய திருமுகத்திலேயும் இதனைக் குறித்துள்ளார். நோக்கமே அந்நூலுக்கு அதுதான்.


தோழர் புலவர் குழந்தை, தமிழர் - தமிழ் இனம் விழிப் புற்று வீறு கொண்டு, விடுதலை பெற்று, வீரமக் களாய், தன்னாட்சித் தனியரசுரிமையுடன் வாழ வேண்டும் என்ற நோக்குடையார். எனவே, அவர் தமது அறிவுத்திறனை, ஆராய்ச்சி அனுபவத்தை, தமிழை, தமிழ்க் கவிப்புலமையை இந்த நோக்கத்துக்குப் பயன்படுத்தியுள்ளார். காவியத்திலே தமிழ்நாடு, தமிழ், தமிழர் தன்மை, ஆரியர் வருகை அவரைத் தமிழர் ஆதரித்தமை, ஆரியரின் உட்கருத்து, அவர் தம் உளவு முறை, கெடுநினைப்பு, தீயசெயல் ஆகியவற்றினை விரித்துரைத்திருக்கிறார்.

சுருங்கக் கூறுமிடத்து இந்நூல், பழமைக்குப் பயணச்சீட்டு; புதுமைக்கு நுழைவுச்சீட்டு; தன்மான இயக்கத்தார் தமிழ்ப்பகைவர்கள், காவியச்சுவை யறி யாதார், கலையுணர்வில்லாதார் என்ற அவமொழியினை அடித்துத் துரத்தும் ஆற்றலாயுதம்; தமிழ் மறுமலர்ச்சியின் தலைசிறந்த நறுமலர்; நெடுநாள் ஆராய்ச்சியும், நுண்ணிய புலமையும், இனப்பற்றும் ஒருங்கமைந்த ஓவியம்; தமிழரின் புதுவாழ்வுக்கான போர்முரசு; காவிய உருவில் ஆரியத்தைப் புகுத்திவிட்டோம். எனவே, இது அழிந்துபடாது என்று இறுமாந்திருப்போருக்கு ஓர் அறை கூவல்; தமிழருக்கு உண்மையை உணருமாறு கூறும் ஓர் அன்பழைப்பு; தமிழரசுக்குக் கால்கோள்; விடுதலைக் கீதம்.

இவ்வரிய நூலை, மிகச் சிரமப்பட்டு, தமிழரின் தன்மானம் தழைக்க வேண்டும் என்ற பெருநோக்குடன் எழுதியுள்ளமைக்குப் புலவர் குழந்தைக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன், நந்தமிழ் மக்கள் இதற்குப் பேராதரவு தருவர் என்று அவர்க்கு உறுதி கூறுகிறேன். தமிழராகிய நீவிர், உமக்கென ஆக்கப்பட்ட இத்தனித் தமிழ்க் காவியத்தைப் போற்றியாதரிப்பீர் என்ற நம்பிக்கையை ஈடேற்றி வைக்குமாறு கேட்டுக்கொள் கிறேன். வணக்கம்.

அன்பன்,
அண்ணாத்துரை

காஞ்சிபுரம்
19.06.46



# நன்றி நவிலல்

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது (தமிழ் மறை)

மாதா பிதா குரு தெய்வம் ஆகியோர்க்கு
முதற்கண் பாதம் பணிந்து நன்றிகள்
திருமணத் திருநாளில் சுற்றம் சூழவருகை தந்து
பெருமனத்தொடுதிருமறைத் தடம்பதித்து
குருநிலையில் வாழ்த்தி ஏகும் எம்
அன்னைத் தமிழ் உறவுகளே ஆனந்தத்
தேன் ஊறும் அகப்பூ மலர்ந்து மகிழ்ந்து
இன்ப வாழ்வில் வான்முட்டும் அன்போடு
நன்றிப் பூக்களை நல்குகின்றோம்.

அலைபேசி முகநூல் மின்னஞ்சல் ஊடாகவும்
விலையிலா வாழ்த்துக்கள் வழங்கிய எங்கள்
புலம்பெயர் உறவுகளே உங்களுக்கும் - தாய்
நிலத்திலிருந்து நன்றிகளை நல்குகின்றோம்

என்றும் அன்புடன்
வினோத் காயத்திரி

Printed by :Mathi Colours Nallur 021 2229285